# Jos

## Chapter 22

### Tamil Interlinear

Reference: Tamil Indian Revised Version (IRV)

| וְלַחֲצִי | וְלַגָּדִי | לָרְאוּבֵנִי | יְהוֹשֻׁעַ | יִקְרָא | אָז | 1 |
|---|---|---|---|---|---|---|
| -மற்றும்-பாதி | -மற்றும்-காத்தியரை | -ரூபனியரை | யோசுவா | அழைத்தார் | அப்பொழுது | |
| H2677 | H1425 | H7206 | H3091 | H7121 | | |

| מְנַשֶּׁה׃ | מַטֵּה |
|---|---|
| மனாசேயின் | கோத்திரத்தை |
| H4519 | H4294 |

> அப்பொழுது யோசுவா ரூபனியர்களையும் காத்தியர்களையும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தார்களையும் அழைத்து,

| אֲשֶׁר | כָּל־ | אֵת | שְׁמַרְתֶּם | אַתֶּם | אֲלֵיהֶם | וַיֹּאמֶר | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| – | எல்லா- | -ஐ | கைக்கொண்டீர்கள் | நீங்கள் | அவர்களிடம் | -மற்றும்-சொன்னார் | |
| | H3605 | H0853 | H8104 | | H0413 | H0559 | |

| וַתִּשְׁמְעוּ | יְהוָה | עֶבֶד | מֹשֶׁה | אֶתְכֶם | צִוָּה |
|---|---|---|---|---|---|
| -மற்றும்-கேட்டீர்கள் | யெகோவாவின் | ஊழியக்காரன் | மோசே | உங்களுக்கு | கட்டளையிட்டார் |
| H8085 | H3068 | H5650 | H4872 | H0853 | H6680 |

| אֶתְכֶם׃ | צִוִּיתִי | אֲשֶׁר־ | לְכֹל | בְּקוֹלִי |
|---|---|---|---|---|
| உங்களுக்கு | கட்டளையிட்டேன் | – | -எல்லாவற்றிலும் | -குரலுக்கு-என்னுடைய |
| H0853 | H6680 | | H3605 | |

> அவர்களை நோக்கி: யெகோவாவுடைய ஊழியக்காரனாகிய மோசே உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் நீங்கள் செய்தீர்கள்; நான் உங்களுக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றிலும் என் வார்த்தையின்படி செய்தீர்கள்.

| רַבִּים | יָמִים | זֶה | אֲחֵיכֶם | אֶת־ | עֲזַבְתֶּם | לֹא־ | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| அநேக | நாட்களில் | இந்த | சகோதரர்களை-உங்கள் | -ஐ | விட்டுவிட்டீர்கள் | இல்லை- | |
| | H3117 | H2088 | H0251 | H0853 | | H3808 | |

| יְהוָה | מִצְוַת | מִשְׁמֶרֶת | אֶת־ | וּשְׁמַרְתֶּם | הַזֶּה | הַיּוֹם | עַד |
|---|---|---|---|---|---|---|---|
| யெகோவா | கற்பனையை | கட்டளையின் | -ஐ | -மற்றும்-காத்தீர்கள் | -இந்த | -நாள் | வரை |
| H3068 | H4687 | H4931 | H0853 | H8104 | H2088 | H3117 | H5704 |

| אֱלֹהֵיכֶם׃ |
|---|
| தேவனுடைய-உங்கள் |
| H0430 |

> நீங்கள் இதுவரைக்கும் அநேக நாட்களாக உங்களுடைய சகோதரர்களைக் கைவிடாமல், உங்களுடைய தேவனாகிய யெகோவாவுடைய கட்டளையைக் காத்துக்கொண்டு நடந்தீர்கள்.

4

| | | | |
|---|---|---|---|
| אֱלֹהֵיכֶם | יְהוָה | הֵנִיחַ | וְעַתָּה |
| தேவன்-உங்கள் | யெகோவா | இளைப்பாறுதல்-கொடுத்தார் | -மற்றும்-இப்பொழுது |
| H0430 | H3068 | H5117 | H6258 |

| | | | | |
|---|---|---|---|---|
| וְעַתָּה | לָהֶם | דִּבֶּר | כַּאֲשֶׁר | לַאֲחֵיכֶם |
| -மற்றும்-இப்பொழுது | அவர்களுக்கு | பேசினார் | -போல | -சகோதரர்களுக்கு-உங்கள் |
| H6258 | | H1696 | | H0251 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| אֶרֶץ | אֶל- | לְאָהֳלֵיכֶם | לָכֶם | וּלְכוּ | פְּנוּ |
| தேசம் | -க்கு | -கூடாரங்களுக்கு-உங்கள் | உங்களுக்கு | -மற்றும்-போங்கள் | திரும்புங்கள் |
| H0776 | H0413 | H0168 | | H3212 | H6437 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| יְהוָה | עֶבֶד | מֹשֶׁה | לָכֶם | נָתַן | אֲשֶׁר | אֲחֻזַּתְכֶם |
| யெகோவாவின் | ஊழியக்காரன் | மோசே | உங்களுக்கு | கொடுத்தார் | - | சொத்து-உங்கள் |
| H3068 | H5650 | H4872 | | H5414 | | H0272 |

| | |
|---|---|
| הַיַּרְדֵּן׃ | בְּעֵבֶר |
| -யோர்தானின் | -அப்புறத்தில் |
| H3383 | H5676 |

> இப்பொழுதும் உங்களுடைய தேவனாகிய யெகோவா உங்களுடைய சகோதரர்களுக்குச் சொல்லியிருந்தபடியே, அவர்களை ஓய்ந்திருக்கச் செய்தார்; ஆகவே யெகோவாவுடைய ஊழியக்காரனாகிய மோசே யோர்தானுக்கு மறுபுறத்திலே உங்களுக்குக் கொடுத்த உங்களுக்குச் சொந்தமான தேசத்தில் இருக்கிற உங்களுடைய கூடாரங்களுக்குத் திரும்பிப்போங்கள்.

5

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| וְאֶת- | הַמִּצְוָה | אֶת- | לַעֲשׂוֹת | מְאֹד | שִׁמְרוּ | רַק |
| -மற்றும்-ஐ | -கற்பனையை | -ஐ | -செய்ய | மிகவும் | காத்துக்கொள்ளுங்கள் | மட்டும் |
| H0853 | H4687 | H0853 | | H3966 | H8104 | H7535 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| עֶבֶד- | מֹשֶׁה | אֶתְכֶם | צִוָּה | אֲשֶׁר | הַתּוֹרָה |
| ஊழியக்காரன்- | மோசே | உங்களுக்கு | கட்டளையிட்டார் | - | -நியாயப்பிரமாணத்தை |
| H5650 | H4872 | H0853 | H6680 | | H8451 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| בְּכָל- | וְלָלֶכֶת | אֱלֹהֵיכֶם | יְהוָה | אֶת- | לְאַהֲבָה | יְהוָה |
| -எல்லா- | -மற்றும்-நடக்க | தேவனை-உங்கள் | யெகோவா | -ஐ | -அன்புகூர | யெகோவாவின் |
| H3605 | H3212 | H0430 | H3068 | H0853 | H0157 | H3068 |

| | | | |
|---|---|---|---|
| וּלְדָבְקָה- | מִצְוֺתָיו | וְלִשְׁמֹר | דְּרָכָיו |
| -மற்றும்-ஒட்டிக்கொள்ள- | கற்பனைகளை-அவருடைய | -மற்றும்-காக்க | வழிகளில்-அவருடைய |
| H1692 | H4687 | H8104 | H1870 |

| | | | | |
|---|---|---|---|---|
| וּבְכָל- | לְבַבְכֶם | בְּכָל- | וּלְעָבְדוֹ | בוֹ |
| -மற்றும்-எல்லா- | இருதயத்தோடு-உங்கள் | -எல்லா- | -மற்றும்-சேவிக்க-அவரை | -அவரை |
| H3605 | H3824 | H3605 | H5647 | |

| |
|---|
| נַפְשְׁכֶם׃ |
| ஆத்துமாவோடு-உங்கள் |
| H5315 |

> ஆனாலும் நீங்கள் உங்களுடைய தேவனாகிய யெகோவாவிடம் அன்புவைத்து, அவருடைய வழிகளிலெல்லாம் நடந்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவரைப் பற்றிக்கொண்டிருந்து, அவரை உங்களுடைய முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் தொழுதுகொள்கிறதற்காக, யெகோவாவுடைய ஊழியக்காரனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கட்டளைகளின்படியும் நியாயப்பிரமாணத்தின்படியும் செய்வதற்கு மிகவும் கவனமாக இருங்கள் என்றான்.

6
וַיְבָרְכֵם -மற்றும்-ஆசீர்வதித்தார்-அவர்களை H1288
יְהוֹשֻׁעַ யோசுவா H3091
וַיְשַׁלְּחֵם -மற்றும்-அனுப்பினார்-அவர்களை H7971
וַיֵּלְכוּ -மற்றும்-போனார்கள் H3212
אֶל־ -க்கு H0413
אָהֳלֵיהֶם׃ கூடாரங்களுக்கு-அவர்களுடைய H0168
ס —

> இவ்விதமாக யோசுவா அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை அனுப்பிவிட்டான்; அவர்கள் தங்களுடைய கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்.

7
וְלַחֲצִי -மற்றும்-பாதிக்கு H2677
שֵׁבֶט கோத்திரத்திற்கு H7626
הַֽמְנַשֶּׁה -மனாசேயின் H4519
נָתַן கொடுத்தார் H5414
מֹשֶׁה மோசே H4872
בַּבָּשָׁן -பாசானில் H1316
וּלְחֶצְיוֹ -மற்றும்-பாதிக்கு-அதன் H2677
נָתַן கொடுத்தார் H5414
יְהוֹשֻׁעַ யோசுவா H3091
עִם־ -உடன்
אֲחֵיהֶם சகோதரர்களோடு-அவர்களுடைய H0251
[מעבר] — H5676
(בְּעֵבֶר) -அப்புறத்தில் H5676
הַיַּרְדֵּן -யோர்தானின் H3383
יָמָּה மேற்கே H3220
וְגַם -மற்றும்-கூட H1571
כִּי ஏனெனில்
שִׁלְּחָם அனுப்பினார்-அவர்களை H7971
יְהוֹשֻׁעַ யோசுவா H3091
אֶל־ -க்கு H0413
אָהֳלֵיהֶם கூடாரங்களுக்கு-அவர்களுடைய H0168
וַיְבָרְכֵם׃ -மற்றும்-ஆசீர்வதித்தார்-அவர்களை H1288

> மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்கு மோசே பாசானிலே பங்கு கொடுத்தான்; அதினுடைய மற்றப் பாதிக்கு, யோசுவா யோர்தான் நதிக்கு இந்தப் புறத்திலே மேற்கே அவர்களுடைய சகோதரர்களோடு பங்கு கொடுத்தான்; யோசுவா அவர்களை அவர்களுடைய கூடாரங்களுக்கு அனுப்பிவிடுகிறபோது, அவர்களை ஆசீர்வதித்து:

8
וַיֹּאמֶר -மற்றும்-சொன்னார் H0559
אֲלֵיהֶם அவர்களிடம் H0413
לֵאמֹר சொல்லி H0559
בִּנְכָסִים -செல்வங்களோடு H5233
רַבִּים மிகுந்த
שׁוּבוּ திரும்புங்கள் H7725
אֶל־ -க்கு H0413
אָהֳלֵיכֶם கூடாரங்களுக்கு-உங்கள் H0168
וּבְמִקְנֶה -மற்றும்-மிருகங்களோடு H4735
רַב־ மிகுந்த-
מְאֹד மிகவும் H3966
בְּכֶסֶף -வெள்ளியோடு H3701
וּבְזָהָב -மற்றும்-பொன்னோடு H2091
וּבִנְחֹשֶׁת -மற்றும்-வெண்கலத்தோடு
וּבְבַרְזֶל -மற்றும்-இரும்போடு H1270
וּבִשְׂלָמוֹת -மற்றும்-வஸ்திரங்களோடு H8008
הַרְבֵּה மிகுதியான
מְאֹד மிகவும் H3966
חִלְקוּ பங்கிடுங்கள்
שְׁלַל־ கொள்ளையை- H7998
אֹיְבֵיכֶם பகைவர்களின்-உங்கள் H0341
עִם־ -உடன்
אֲחֵיכֶם׃ சகோதரர்களோடு-உங்கள் H0251
פ —

> நீங்கள் மிகுந்த ஐசுவரியத்தோடும், ஏராளமான ஆடுமாடுகளோடும், பொன், வெள்ளி, வெண்கலம், இரும்போடும், அநேக ஆடைகளோடும் உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பி, உங்களுடைய எதிரிகளிடம் கொள்ளையிட்டதை உங்களுடைய சகோதரர்களோடு பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்றான்.

9

| | | |
|---|---|---|
| וַיָּשֻׁבוּ | -மற்றும்-திரும்பினார்கள் | H7725 |
| וַיֵּלְכוּ | -மற்றும்-போனார்கள் | H3212 |
| בְנֵי־ | புத்திரர்- | |
| רְאוּבֵן | ரூபனின் | H7205 |
| וּבְנֵי־ | -மற்றும்-புத்திரர்- | |
| גָד | காத்தின் | H1410 |
| וַחֲצִי | -மற்றும்-பாதி | H2677 |
| שֵׁבֶט | கோத்திரத்தின் | H7626 |
| הַמְנַשֶּׁה | -மனாசேயின் | H4519 |
| מֵאֵת | -இடமிருந்து | H0854 |
| בְּנֵי | புத்திரரிடமிருந்து | |
| יִשְׂרָאֵל | இஸ்ரவேலின் | H3478 |
| מִשִּׁלֹה | -சீலோவிலிருந்து | H7887 |
| אֲשֶׁר | - | |
| בְּאֶרֶץ־ | -தேசத்தில்- | H0776 |
| כְּנָעַן | கானானின் | |
| לָלֶכֶת | -போக | H3212 |
| אֶל־ | -க்கு | H0413 |
| אֶרֶץ | தேசம் | H0776 |
| הַגִּלְעָד | -கிலேயாத்தின் | H1568 |
| אֶל־ | -க்கு | H0413 |
| אֶרֶץ | தேசம் | H0776 |
| אֲחֻזָּתָם | சொத்தின்-அவர்களுடைய | H0272 |
| אֲשֶׁר | - | |
| נֹאחֲזוּ־ | சொந்தமாக்கிக்கொண்டார்கள்- | H0270 |
| בָהּ | -அதில் | |
| עַל־ | -படி | |
| פִּי | வாய் | H6310 |
| יְהוָה | யெகோவாவின் | H3068 |
| בְּיַד־ | -கையினால்- | H3027 |
| מֹשֶׁה׃ | மோசேயின் | H4872 |

> அப்பொழுது ரூபனுடைய சந்ததியினர்களும் காத்தின் சந்ததியினர்களும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தார்களும், யெகோவா மோசேயைக் கொண்டு கட்டளையிட்டபடியே, அவர்கள் கைவசப்படுத்திக்கொண்ட அவர்களுடைய சொந்த தேசமான கீலேயாத் தேசத்திற்குப் போக, கானான் தேசத்தில் உள்ள சீலோவில் இருந்த இஸ்ரவேல் மக்களைவிட்டுத் திரும்பிப்போனார்கள்.

10

| | | |
|---|---|---|
| וַיָּבֹאוּ | -மற்றும்-வந்தார்கள் | H0935 |
| אֶל־ | -க்கு | H0413 |
| גְּלִילוֹת | எல்லைப்புறங்களுக்கு | H1552 |
| הַיַּרְדֵּן | -யோர்தானின் | H3383 |
| אֲשֶׁר | - | |
| בְּאֶרֶץ | -தேசத்தில் | H0776 |
| כְּנָעַן | கானானின் | |
| וַיִּבְנוּ | -மற்றும்-கட்டினார்கள் | H1129 |
| בְנֵי־ | புத்திரர்- | |
| רְאוּבֵן | ரூபனின் | H7205 |
| וּבְנֵי־ | -மற்றும்-புத்திரர்- | |
| גָד | காத்தின் | H1410 |
| וַחֲצִי | -மற்றும்-பாதி | H2677 |
| שֵׁבֶט | கோத்திரத்தின் | H7626 |
| הַמְנַשֶּׁה | -மனாசேயின் | H4519 |
| שָׁם | அங்கே | H8033 |
| מִזְבֵּחַ | பலிபீடம் | H4196 |
| עַל־ | -மேல் | |
| הַיַּרְדֵּן | -யோர்தானின் | H3383 |
| מִזְבֵּחַ | பலிபீடம் | H4196 |
| גָּדוֹל | பெரிய | |
| לְמַרְאֶה׃ | -தோற்றத்திற்கு | H4758 |

> கானான் தேசத்தில் இருக்கிற யோர்தானின் எல்லைகளுக்கு வந்தபோது, ரூபனுடைய சந்ததியினர்களும், காத்தின் சந்ததியினர்களும், மனாசேயின் பாதிக் கோத்திரத்தார்களும், அங்கே யோர்தான் நதியின் மேற்கு பகுதியில் பார்வைக்குப் பெரிதான ஒரு பலிபீடத்தைக் கட்டினார்கள்.

11

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| וַיִּשְׁמְעוּ | בְנֵי־ | יִשְׂרָאֵל | לֵאמֹר | הִנֵּה | בָנוּ | בְנֵי־ |
| -மற்றும்-கேட்டார்கள் | புத்திரர்- | இஸ்ரவேலின் | சொல்லி | இதோ | கட்டினார்கள் | புத்திரர்- |
| H8085 | | H3478 | H0559 | H2009 | H1129 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| רְאוּבֵן | וּבְנֵי־ | גָד | וַחֲצִי | שֵׁבֶט | הַמְנַשֶּׁה | אֶת־ |
| ரூபனின் | -மற்றும்-புத்திரர்- | காத்தின் | -மற்றும்-பாதி | கோத்திரத்தின் | -மனாசேயின் | -ஐ |
| H7205 | | H1410 | H2677 | H7626 | H4519 | H0853 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| הַמִּזְבֵּחַ | אֶל־ | מוּל | אֶרֶץ | כְּנַעַן | אֶל־ | גְּלִילוֹת | הַיַּרְדֵּן |
| -பலிபீடத்தை | -க்கு | எதிரே | தேசம் | கானானின் | -க்கு | எல்லைப்புறங்களில் | -யோர்தானின் |
| H4196 | H0413 | H4136 | H0776 | | H0413 | H1552 | H3383 |

| | | | |
|---|---|---|---|
| אֶל־ | עֵבֶר | בְּנֵי | יִשְׂרָאֵל׃ |
| -க்கு | கரையில் | புத்திரரின் | இஸ்ரவேலின் |
| H0413 | H5676 | | H3478 |

> ரூபனுடைய சந்ததியினர்களும் காத்தின் சந்ததியினர்களும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தார்களும் கானான் தேசத்திற்கு எதிரே இஸ்ரவேல் மக்களுக்குச் சொந்தமான யோர்தானின் எல்லைகளில் ஒரு பலிபீடத்தைக் கட்டினார்கள் என்று இஸ்ரவேல் மக்கள் கேள்விப்பட்டார்கள்.

12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וַיִּשְׁמְעוּ | בְּנֵי | יִשְׂרָאֵל | וַיִּקָּהֲלוּ | כָּל־ | עֲדַת |
| -மற்றும்-கேட்டார்கள் | புத்திரர் | இஸ்ரவேலின் | -மற்றும்-கூடினார்கள் | எல்லா- | சபையும் |
| H8085 | | H3478 | H6950 | H3605 | H5712 |

| | | | | |
|---|---|---|---|---|
| בְּנֵי־ | יִשְׂרָאֵל | שִׁלֹה | לַעֲלוֹת | עֲלֵיהֶם |
| புத்திரரின்- | இஸ்ரவேலின் | சீலோவில் | -போருக்குப்போக | அவர்களுக்கெதிராக |
| | H3478 | H7887 | H5927 | |

| | |
|---|---|
| לַצָּבָא׃ | פ |
| -யுத்தத்திற்கு | — |

> அவர்கள் அதைக் கேள்விப்பட்டபோது, இஸ்ரவேல் மக்களின் சபையாரெல்லோரும் அவர்களுக்கு எதிராக யுத்தம்செய்வதற்காக சீலோவிலே கூடி,

13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וַיִּשְׁלְחוּ | בְנֵי־ | יִשְׂרָאֵל | אֶל־ | בְּנֵי־ | רְאוּבֵן |
| -மற்றும்-அனுப்பினார்கள் | புத்திரர்- | இஸ்ரவேலின் | -க்கு | புத்திரர்- | ரூபனின் |
| H7971 | | H3478 | H0413 | | H7205 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| וְאֶל־ | בְּנֵי־ | גָד | וְאֶל־ | חֲצִי | שֵׁבֶט־ | מְנַשֶּׁה | אֶל־ |
| -மற்றும்-க்கு | புத்திரர்- | காத்தின் | -மற்றும்-க்கு | பாதி | கோத்திரத்தின்- | மனாசேயின் | -க்கு |
| H0413 | | H1410 | H0413 | H2677 | H7626 | H4519 | H0413 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| אֶרֶץ | הַגִּלְעָד | אֶת־ | פִּינְחָס | בֶּן־ | אֶלְעָזָר | הַכֹּהֵן׃ |
| தேசம் | -கிலேயாத்தின் | -ஐ | பினெகாசை | மகன்- | எலெயாசாரின் | -ஆசாரியனை |
| H0776 | H1568 | H0853 | H6372 | | H0499 | H3548 |

> கீலேயாத் தேசத்தில் இருக்கிற ரூபன் கோத்திரத்தார்களிடமும், காத் கோத்திரத்தார்களிடமும்,, மனாசேயின் பாதிக் கோத்திரத்தார்களிடமும், ஆசாரியனாகிய எலெயாசாருடைய மகனாகிய பினெகாசையும்,

14

| וַעֲשָׂרָה | נְשִׂאִים | עִמּוֹ | נָשִׂיא | אֶחָד | נָשִׂיא | אֶחָד | לְבֵית |
|---|---|---|---|---|---|---|---|
| -மற்றும்-பத்து | பிரபுக்கள் | அவனோடு | பிரபு | ஒரு | பிரபு | ஒரு | -வீட்டிற்கு |
| H6235 | | | | H0259 | | H0259 | |

| אָב | לְכֹל | מַטּוֹת | יִשְׂרָאֵל | וְאִישׁ |
|---|---|---|---|---|
| தகப்பனுடைய | -எல்லா | கோத்திரங்களிலும் | இஸ்ரவேலின் | -மற்றும்-ஒவ்வொருவனும் |
| H0001 | H3605 | H4294 | H3478 | H0376 |

| רֹאשׁ | בֵּית־ | אֲבוֹתָם | הֵמָּה | לְאַלְפֵי |
|---|---|---|---|---|
| தலைவன் | வீட்டின்- | பிதாக்களின்-அவர்களுடைய | அவர்கள் | -ஆயிரங்களுக்கு |
| | | H0001 | H1992 | H0505 |

| יִשְׂרָאֵל׃ |
|---|
| இஸ்ரவேலின் |
| H3478 |

> அவனோடு இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலும் ஒவ்வொரு பிதாவின் குடும்பத்திற்கு ஒவ்வொரு பிரபுவாகப் பத்துப் பிரபுக்களையும் அனுப்பினார்கள்; இஸ்ரவேலின் சேனைகளிலே ஆயிரம்பேர்களுக்குள்ளே ஒவ்வொருவனும் தன் தன் பிதாவின் குடும்பத்திற்குத் தலைவனாக இருந்தான்.

15

| וַיָּבֹאוּ | אֶל־ | בְּנֵי־ | רְאוּבֵן | וְאֶל־ | בְנֵי־ | גָד |
|---|---|---|---|---|---|---|
| -மற்றும்-வந்தார்கள் | -க்கு | புத்திரர்- | ரூபனின் | -மற்றும்-க்கு | புத்திரர்- | காத்தின் |
| H0935 | H0413 | | H7205 | H0413 | | H1410 |

| וְאֶל־ | חֲצִי | שֵׁבֶט־ | מְנַשֶּׁה | אֶל־ | אֶרֶץ | הַגִּלְעָד |
|---|---|---|---|---|---|---|
| -மற்றும்-க்கு | பாதி | கோத்திரத்தின்- | மனாசேயின் | -க்கு | தேசம் | -கிலேயாத்தின் |
| H0413 | H2677 | H7626 | H4519 | H0413 | H0776 | H1568 |

| וַיְדַבְּרוּ | אִתָּם | לֵאמֹר׃ |
|---|---|---|
| -மற்றும்-பேசினார்கள் | அவர்களோடு | சொல்லி |
| H1696 | H0854 | H0559 |

> அவர்கள் கீலேயாத் தேசத்திலே ரூபன் கோத்திரத்தார், காத் கோத்திரத்தார், மனாசேயின் பாதிக் கோத்திரத்தார்களாகிய இவர்களிடம் வந்து:

16

| כֹּה | אָמְרוּ | כֹּל | עֲדַת | יְהוָה | מָה־ | הַמַּעַל | הַזֶּה |
|---|---|---|---|---|---|---|---|
| இவ்வாறு | சொன்னார்கள் | எல்லா | சபையும் | யெகோவாவின் | என்ன- | -துரோகம் | -இந்த |
| H3541 | H0559 | H3605 | H5712 | H3068 | H4100 | H4604 | H2088 |

| אֲשֶׁר | מְעַלְתֶּם | בֵּאלֹהֵי | יִשְׂרָאֵל | לָשׁוּב | הַיּוֹם |
|---|---|---|---|---|---|
| - | துரோகம்செய்தீர்கள் | -தேவனுக்கு-விரோதமாய் | இஸ்ரவேலின் | -திரும்ப | -இன்று |
| | H4603 | H0430 | H3478 | H7725 | H3117 |

| מֵאַחֲרֵי | יְהוָה | בִּבְנוֹתְכֶם | לָכֶם | מִזְבֵּחַ |
|---|---|---|---|---|
| -பின்பற்றுவதிலிருந்து | யெகோவாவை | -கட்டிக்கொண்டு-உங்களுக்கு | உங்களுக்கு | பலிபீடம் |
| | H3068 | H1129 | | H4196 |

| לִמְרָדְכֶם | הַיּוֹם | בַּיהוָה׃ |
|---|---|---|
| -கலகம்செய்ய-உங்கள் | -இன்று | -யெகோவாவுக்கு-விரோதமாய் |
| H4775 | H3117 | H3068 |

> நீங்கள் இந்த நாளிலே யெகோவாவைப் பின்பற்றாதபடித் திரும்பி, இந்த நாளிலே யெகோவாவுக்கு எதிராகக் கலகம் செய்யும்படியாக உங்களுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, இஸ்ரவேலின் தேவனுக்கு எதிராகச் செய்த இந்தத் துரோகம் என்ன?

17

| הַמְעַט־ | לָנוּ֙ | אֶת־ | עֲוֺ֣ן | פְּע֔וֹר | אֲשֶׁ֤ר | לֹֽא־ |
|---|---|---|---|---|---|---|
| -சிறிதோ- | நமக்கு | -ஐ | அக்கிரமம் | பேயோரின் | - | இல்லை- |
| H4592 | | H0853 | H5771 | H6465 | | H3808 |

| הִטַּהַ֙רְנוּ֙ | מִמֶּ֔נּוּ | עַ֖ד | הַיּ֣וֹם | הַזֶּ֑ה | וַיְהִ֥י | הַנֶּ֖גֶף |
|---|---|---|---|---|---|---|
| சுத்திகரித்துக்கொண்டோம் | -அதிலிருந்து | வரை | -நாள் | -இந்த | -மற்றும்-இருந்தது | -வாதை |
| H2891 | | H5704 | H3117 | H2088 | H1961 | H5063 |

| בַּעֲדַ֥ת | יְהוָֽה׃ |
|---|---|
| -சபையில் | யெகோவாவின் |
| H5712 | H3068 |

> பேயோரின் அக்கிரமம் நமக்குப் போதாதா? யெகோவாவுடைய சபையிலே வாதை உண்டாயிருந்ததே; இந்த நாள்வரைக்கும் நாம் அதிலிருந்து நீங்கிச் சுத்தமாகவில்லையே.

18

| וְאַתֶּם֙ | תָּשֻׁ֣בוּ | הַיּ֔וֹם | מֵאַחֲרֵ֖י | יְהוָ֑ה |
|---|---|---|---|---|
| -மற்றும்-நீங்கள் | திரும்புவீர்கள் | -இன்று | -பின்பற்றுவதிலிருந்து | யெகோவாவை |
| | H7725 | H3117 | | H3068 |

| וְהָיָ֗ה | אַתֶּ֞ם | תִּמְרְד֤וּ | הַיּוֹם֙ | בַּֽיהוָ֔ה |
|---|---|---|---|---|
| -மற்றும்-ஆகும் | நீங்கள் | கலகம்செய்வீர்கள் | -இன்று | -யெகோவாவுக்கு-விரோதமாய் |
| H1961 | | H4775 | H3117 | H3068 |

| וּמָחָ֕ר | אֶֽל־ | כָּל־ | עֲדַ֥ת | יִשְׂרָאֵ֖ל | יִקְצֹֽף׃ |
|---|---|---|---|---|---|
| -மற்றும்-நாளை | -க்கு- | எல்லா- | சபையின்மேல் | இஸ்ரவேலின் | கோபப்படுவார் |
| H4279 | H0413 | H3605 | H5712 | H3478 | H7107 |

> நீங்கள் இந்த நாளில் யெகோவாவைப் பின்பற்றாதபடித் திரும்புவீர்களோ? இன்று யெகோவாவுக்கு எதிராகக் கலகம் செய்வீர்களோ? அவர் நாளைக்கு இஸ்ரவேலின் சபையின்மேல் கடுங்கோபங்கொள்வாரே.

19

| וְאַ֨ךְ | אִם־ | טְמֵאָ֜ה | אֶ֣רֶץ | אֲחֻזַּתְכֶ֗ם |
|---|---|---|---|---|
| -மற்றும்-ஆனால் | அப்படியானால்- | அசுத்தமானது | தேசம் | சொத்தின்-உங்கள் |
| H0389 | | H2931 | H0776 | H0272 |

| עִבְר֨וּ | לָכֶ֜ם | אֶל־ | אֶ֨רֶץ | אֲחֻזַּ֤ת | יְהוָה֙ | אֲשֶׁ֤ר |
|---|---|---|---|---|---|---|
| கடந்துவாருங்கள் | உங்களுக்கு | -க்கு | தேசம் | சொத்தின் | யெகோவாவின் | - |
| | | H0413 | H0776 | H0272 | H3068 | |

| שָֽׁכַן־ | שָׁם֙ | מִשְׁכַּ֣ן | יְהוָ֔ה |
|---|---|---|---|
| குடிகொண்டிருக்கிறார்- | அங்கே | வாசஸ்தலம் | யெகோவாவின் |
| H7931 | H8033 | H4908 | H3068 |

| וְהֵאָחֲז֖וּ | בְּתוֹכֵ֑נוּ | וּבַֽיהוָ֣ה |
|---|---|---|
| -மற்றும்-சொந்தமாக்கிக்கொள்ளுங்கள் | -நம்மிடையே | -மற்றும்-யெகோவாவுக்கு-விரோதமாய் |
| H0270 | H8432 | H3068 |

| אַל־ | תִּמְרֹ֗דוּ | וְאֹתָ֙נוּ֙ | אַל־ |
|---|---|---|---|
| வேண்டாம்- | கலகம்செய்யுங்கள் | -மற்றும்-நமக்கு-விரோதமாய் | வேண்டாம்- |
| H0408 | H4775 | H0853 | H0408 |

| תִּמְרֹ֔דוּ | בִּבְנֹתְכֶ֥ם | לָכֶ֛ם | מִזְבֵּ֔חַ | מִֽבַּלְעֲדֵ֔י |
|---|---|---|---|---|
| கலகம்செய்யுங்கள் | -கட்டிக்கொண்டு-உங்களுக்கு | உங்களுக்கு | பலிபீடம் | -தவிர |
| H4775 | H1129 | | H4196 | H1107 |

| מִזְבַּ֖ח | יְהוָ֥ה | אֱלֹהֵֽינוּ׃ |
|---|---|---|
| பலிபீடத்தை | யெகோவா | தேவனுடைய-நம்முடைய |
| H4196 | H3068 | H0430 |

> உங்களுடைய சொந்த தேசம் தீட்டாக இருந்ததானால், யெகோவாவுடைய ஆசரிப்புக்கூடாரம் இருக்கிற யெகோவாவுடைய சொந்தமான அக்கரையில் உள்ள தேசத்திற்கு வந்து, எங்கள் நடுவே பங்குகளைப் பெற்றுக்கொள்ளலாமே; நீங்கள் நம்முடைய தேவனாகிய யெகோவாவுடைய பலிபீடத்தை அல்லாமல் உங்களுக்கு வேறொரு பலிபீடத்தைக் கட்டுகிறதினாலே, யெகோவாவுக்கும் எங்களுக்கும் எதிராக பிடிவாதம் செய்யாமல் இருங்கள்.

20 הֲלֹ֣וא -அல்லவா H3808 | עָכָ֣ן ஆகான் H5912 | בֶּן־ மகன்- | זֶ֗רַח சேராவின் H2226 | מָ֤עַל துரோகம்செய்தான் H4603 | מַ֙עַל֙ துரோகம் H4604

בַּחֵ֔רֶם -சாபத்திற்குரியவற்றில் | וְעַֽל־ -மற்றும்-மேல்- | כָּל־ எல்லா- H3605 | עֲדַ֥ת சபையின்மேல் H5712 | יִשְׂרָאֵ֖ל இஸ்ரவேலின் H3478 | הָ֣יָה இருந்தது H1961

קָ֑צֶף கோபம் | וְהוּא֙ -மற்றும்-அவன் H1931 | אִ֣ישׁ மனிதன் H0376 | אֶחָ֔ד ஒரு H0259 | לֹ֥א இல்லை H3808 | גָוַ֖ע மடிந்தான் H1478 | בַּעֲוֹנֹֽו׃ -அக்கிரமத்தில்-அவனுடைய H5771

פ

> சேராவின் மகனாகிய ஆகான் சாபத்தீடானப் பொருளைக்குறித்துத் துரோகம்செய்ததினாலே, இஸ்ரவேல் மக்களின்மேல் கடுங்கோபம் வரவில்லையா? அவன் ஒருவன்மட்டும் தன்னுடைய அக்கிரமத்தினாலே மடிந்துபோகவில்லையென்று யெகோவாவுடைய சபையார்கள் எல்லோரும் சொல்லச்சொன்னார்கள் என்றார்கள்.

21 וַֽיַּעֲנוּ֙ -மற்றும்-பதிலளித்தார்கள் | בְּנֵי־ புத்திரர்- | רְאוּבֵ֣ן ரூபனின் H7205 | וּבְנֵי־ -மற்றும்-புத்திரர்- | גָ֔ד காத்தின் H1410 | וַחֲצִ֖י -மற்றும்-பாதி H2677

שֵׁ֣בֶט கோத்திரத்தின் H7626 | הַֽמְנַשֶּׁ֑ה -மனாசேயின் H4519 | וַֽיְדַבְּר֔וּ -மற்றும்-பேசினார்கள் H1696 | אֶת־ -ஐ H0854 | רָאשֵׁ֖י தலைவர்களிடம் | אַלְפֵ֥י ஆயிரங்களின் H0505

יִשְׂרָאֵֽל׃ இஸ்ரவேலின் H3478

> அப்பொழுது ரூபன் கோத்திரத்தார்களும், காத் கோத்திரத்தார்களும், மனாசேயின் பாதிக் கோத்திரத்தார்களும், இஸ்ரவேலின் ஆயிரம்பேர்களின் தலைவர்களுக்கு மறுமொழியாக:

22 אֵל֩ தேவன் H0410 | אֱלֹהִ֨ים தேவன் H0430 | יְהוָ֜ה யெகோவா H3068 | וְאֵ֣ל தேவன் H0410 | אֱלֹהִ֤ים தேவன் H0430 | יְהוָה֙ யெகோவா H3068 | ה֣וּא அவர் H1931 | יֹדֵ֔עַ அறிந்திருக்கிறார் H3045

וְיִשְׂרָאֵ֖ל -மற்றும்-இஸ்ரவேல் H3478 | ה֣וּא அவன் H1931 | יֵדָ֑ע அறிவான் H3045 | אִם־ அப்படியானால்- | בְּמֶ֤רֶד -கலகத்தில் H4777

וְאִם־ -மற்றும்-அப்படியானால்- | בְּמַ֙עַל֙ -துரோகத்தில் H4604 | בַּֽיהוָ֔ה -யெகோவாவுக்கு-விரோதமாய் H3068 | אַל־ வேண்டாம்- H0408

תֹּושִׁיעֵ֖נוּ இரட்சியும்-எங்களை H3467 | הַיֹּ֥ום -இன்று H3117 | הַזֶּֽה׃ -இந்த H2088

> தேவாதி தேவனாகிய யெகோவா, தேவாதி தேவனாகிய யெகோவாவே, அதை அறிந்திருக்கிறார்; இஸ்ரவேலர்களும் அறிந்துகொள்ளுவார்கள்; அது பிடிவாதத்தினாலாவது, யெகோவாவுடைய கட்டளைக்கு எதிரான துரோகத்தினாலாவது செய்யப்பட்டதானால், இந்த நாளில் அவர் எங்களைக் காப்பாற்றாமல் இருப்பாராக.

23

| | | | | | |
|---|---|---|---|---|---|
| לִבְנוֹת | לָּנוּ | מִזְבֵּחַ | לָשׁוּב | מֵאַחֲרֵי | יְהוָה |
| -கட்ட | நமக்கு | பலிபீடம் | -திரும்ப | -பின்பற்றுவதிலிருந்து | யெகோவாவை |
| H1129 | | H4196 | H7725 | | H3068 |

| | | | | |
|---|---|---|---|---|
| וְאִם־ | לְהַעֲלוֹת | עָלָיו | עוֹלָה | וּמִנְחָה |
| -மற்றும்-அப்படியானால்- | -செலுத்த | அதன்மேல் | சர்வாங்கதகனபலி | -மற்றும்-உணவுபலி |
| | H5927 | | | H4503 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וְאִם־ | לַעֲשׂוֹת | עָלָיו | זִבְחֵי | שְׁלָמִים | יְהוָה |
| -மற்றும்-அப்படியானால்- | -செய்ய | அதன்மேல் | பலிகளை | சமாதானபலிகளின் | யெகோவா |
| | | | H2077 | H8002 | H3068 |

| | |
|---|---|
| הוּא | יְבַקֵּשׁ׃ |
| அவர் | கேட்பார் |
| H1931 | H1245 |

ஒரு காரியத்தைக்குறித்து நாங்கள் எங்களுக்கு அந்த பலிபீடத்தைக் கட்டினதே அல்லாமல், யெகோவாவைப் பின்பற்றாதபடிக்கு விலகுவதற்காவது, அதின்மேல் சர்வாங்கதகனபலியையாவது போஜனபலியையாவது சமாதானபலிகளையாவது செலுத்துகிறதற்காவது அதைச் செய்ததுண்டானால், யெகோவா அதை விசாரிப்பாராக.

24

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וְאִם־ | לֹא | מִדְּאָגָה | מִדָּבָר | עָשִׂינוּ | אֶת־ |
| -மற்றும்-அப்படியானால்- | இல்லை | -கவலையினால் | -காரியத்தினால் | செய்தோம் | -ஐ |
| | H3808 | H1674 | H1697 | | H0853 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| זֹאת | לֵאמֹר | מָחָר | יֹאמְרוּ | בְנֵיכֶם | לְבָנֵינוּ |
| இதை | சொல்லி | நாளை | சொல்வார்கள் | பிள்ளைகள்-உங்கள் | -பிள்ளைகளுக்கு-நம்முடைய |
| H2063 | H0559 | H4279 | H0559 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| לֵאמֹר | מַה־ | לָּכֶם | וְלַיהוָה | אֱלֹהֵי | יִשְׂרָאֵל׃ |
| சொல்லி | என்ன- | உங்களுக்கு | -மற்றும்-யெகோவாவோடு | தேவனின் | இஸ்ரவேலின் |
| H0559 | H4100 | | H3068 | H0430 | H3478 |

நாளைக்கு உங்களுடைய பிள்ளைகள் எங்களுடைய பிள்ளைகளை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவாவுக்கும் உங்களுக்கும் என்ன?

25

| | | | | |
|---|---|---|---|---|
| וּגְבוּל | נָתַן־ | יְהוָה | בֵּינֵנוּ | וּבֵינֵיכֶם |
| -மற்றும்-எல்லை | கொடுத்தார்- | யெகோவா | -நமக்கிடையே | -மற்றும்-உங்களுக்கிடையே |
| H1366 | H5414 | H3068 | H0996 | H0996 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| בְּנֵי־ | רְאוּבֵן | וּבְנֵי־ | גָד | אֶת־ | הַיַּרְדֵּן | אֵין־ |
| புத்திரர்- | ரூபனின் | -மற்றும்-புத்திரர்- | காத்தின் | -ஐ | -யோர்தானை | இல்லை- |
| | H7205 | | H1410 | H0853 | H3383 | H0369 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| לָכֶם | חֵלֶק | בַּיהוָה | וְהִשְׁבִּיתוּ | בְנֵיכֶם | אֶת־ |
| உங்களுக்கு | பங்கு | -யெகோவாவில் | -மற்றும்-நிறுத்துவார்கள் | பிள்ளைகள்-உங்கள் | -ஐ |
| | | H3068 | | | H0853 |

| | | | | |
|---|---|---|---|---|
| בָּנֵינוּ | לְבִלְתִּי | יְרֹא | אֶת־ | יְהוָה׃ |
| -பிள்ளைகளை-நம்முடைய | -இல்லாமல் | பயப்படுவதற்கு | -ஐ | யெகோவாவை |
| | H1115 | H3372 | H0853 | H3068 |

ரூபனுடைய மக்கள் காத்தின் மக்களாகிய உங்களுக்கும் எங்களுக்கும் நடுவே யெகோவா யோர்தான் நதியை எல்லையாக வைத்தார்; யெகோவாவிடம் உங்களுக்குப் பங்கு இல்லை என்று சொல்லி, எங்கள் பிள்ளைகளைக் யெகோவா வுக்குப் பயப்படாமலிருக்கச் செய்வார்கள் என்கிற பயத்தினாலே நாங்கள் சொல்லிக்கொண்டது என்னவென்றால்:

26 וַנֹּאמֶר -மற்றும்-சொன்னோம் H0559
נַעֲשֶׂה־ செய்வோம்-
נָּא தயவுசெய்து H4994
לָּנוּ நமக்கு
לִבְנוֹת -கட்ட H1129
אֶת־ -ஐ H0853
הַמִּזְבֵּחַ -பலிபீடத்தை H4196

לֹא இல்லை H3808
לְעוֹלָה -சர்வாங்கதகனபலிக்கு
וְלֹא -மற்றும்-இல்லை H3808
לְזָבַח: -பலிக்கு H2077

> சர்வாங்கதகனத்திற்கு அல்ல, பலிக்கும் அல்ல, எங்கள் சர்வாங்கதகனங்களாலும், பலிகளாலும், சமாதானபலிகளாலும், நாங்கள் யெகோவாவுடைய சந்நிதியில் அவருடைய ஆராதனையைச் செய்யத்தக்கவர்கள் என்று எங்களுக்கும் உங்களுக்கும், நமக்குப் பின்வரும் நம்முடைய சந்ததியார்களுக்கும் நடுவே சாட்சி உண்டாயிருக்கும்படிக்கும்,

27 כִּי ஏனெனில்
עֵד சாட்சி H5707
הוּא அது H1931
בֵּינֵינוּ -நமக்கிடையே H0996
וּבֵינֵיכֶם -மற்றும்-உங்களுக்கிடையே H0996
וּבֵין -மற்றும்-இடையே H0996

דֹּרוֹתֵינוּ தலைமுறைகளின்-நம்முடைய H1755
אַחֲרֵינוּ பின்பு-நம்முடைய
לַעֲבֹד -சேவிக்க H5647
אֶת־ -ஐ H0853
עֲבֹדַת ஆராதனையை H5656

יְהוָה யெகோவாவின் H3068
לְפָנָיו -முன்பாக-அவருடைய H6440
בְּעֹלוֹתֵינוּ -சர்வாங்கதகனபலிகளினாலும்-நம்முடைய

וּבִזְבָחֵינוּ -மற்றும்-பலிகளினாலும்-நம்முடைய H2077
וּבִשְׁלָמֵינוּ -மற்றும்-சமாதானபலிகளினாலும்-நம்முடைய H8002

וְלֹא־ -மற்றும்-இல்லை- H3808
יֹאמְרוּ சொல்வார்கள் H0559
בְנֵיכֶם பிள்ளைகள்-உங்கள்
מָחָר நாளை H4279
לְבָנֵינוּ -பிள்ளைகளுக்கு-நம்முடைய

אֵין־ இல்லை- H0369
לָכֶם உங்களுக்கு
חֵלֶק பங்கு
בַּיהוָה: -யெகோவாவில் H3068

> யெகோவாவிடம் உங்களுக்குப் பங்கு இல்லை என்று உங்களுடைய பிள்ளைகள் நாளைக்கு எங்களுடைய பிள்ளைகளிடம் சொல்லாமலிருப்பதற்காகவே, ஒரு பலிபீடத்தை நமக்காக உண்டுபண்ணுவோம் என்றோம்.

28 וַנֹּאמֶר -மற்றும்-சொன்னோம் H0559
וְהָיָה -மற்றும்-ஆகும் H1961
כִּי־ ஏனெனில்-
יֹאמְרוּ சொல்வார்கள் H0559
אֵלֵינוּ எங்களிடம் H0413

וְאֶל־ -மற்றும்-க்கு H0413
דֹּרֹתֵינוּ தலைமுறைகளுக்கு-நம்முடைய H1755
מָחָר நாளை H4279
וְאָמַרְנוּ -மற்றும்-சொல்வோம் H0559
רְאוּ பாருங்கள் H7200

אֶת־ -ஐ H0853
תַּבְנִית மாதிரியை H8403
מִזְבַּח பலிபீடத்தின் H4196
יְהוָה யெகோவாவின் H3068
אֲשֶׁר־ -
עָשׂוּ செய்தார்கள்
אֲבוֹתֵינוּ பிதாக்கள்-நம்முடைய H0001

לֹא இல்லை H3808
לְעוֹלָה -சர்வாங்கதகனபலிக்கு
וְלֹא -மற்றும்-இல்லை H3808
לְזֶבַח -பலிக்கு H2077
כִּי־ ஏனெனில்-
עֵד சாட்சி H5707
הוּא அது H1931

בֵּינֵינוּ -நமக்கிடையே H0996
וּבֵינֵיכֶם: -மற்றும்-உங்களுக்கிடையே H0996

> நாளைக்கு எங்களோடாவது, எங்களுடைய சந்ததியார்களோடாவது அப்படிச் சொல்வார்களானால், அப்பொழுது சர்வாங்க தகனத்திற்கும் அல்ல, பலிக்கும் அல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே சாட்சிக்காக எங்கள் பிதாக்கள் உண்டுபண்ணின யெகோவாவுடைய பலிபீடத்தின் சாயலான

பலிபீடத்தைப் பாருங்கள் என்று சொல்லலாம் என்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| בַּיהוָ֗ה | לִמְרֹ֣ד | מִמֶּ֜נּוּ | לָּ֨נוּ | חָלִילָה֩ | 29 |
| -யெகோவாவுக்கு-விரோதமாய் | -கலகம்செய்ய | -அதிலிருந்து | நமக்கு | தூரமாயிருப்பதாக | |
| H3068 | H4775 | | | H2486 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| מִזְבֵּ֗חַ | לִבְנוֹת֙ | יְהוָ֔ה | מֵאַחֲרֵ֣י | הַיּ֗וֹם | וְלָשׁ֣וּב |
| பலிபீடம் | -கட்ட | யெகோவாவை | -பின்பற்றுவதிலிருந்து | -இன்று | -மற்றும்-திரும்ப |
| H4196 | H1129 | H3068 | | H3117 | H7725 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| יְהוָה֙ | מִזְבַּח֙ | מִלְּבַד֙ | וּלְזָ֑בַח | לְמִנְחָ֖ה | לְעֹלָ֔ה |
| யெகோவா | பலிபீடத்தை | -தவிர | -மற்றும்-பலிக்கு | -உணவுபலிக்கு | -சர்வாங்கதகனபலிக்கு |
| H3068 | H4196 | H0905 | H2077 | H4503 | |

| | | | | |
|---|---|---|---|---|
| פ | מִשְׁכָּנֽוֹ׃ | לִפְנֵ֥י | אֲשֶׁ֖ר | אֱלֹהֵ֔ינוּ |
| — | வாசஸ்தலத்தின்-அவருடைய | -முன்பாக | - | தேவனுடைய-நம்முடைய |
| | H4908 | H6440 | | H0430 |

> நம்முடைய தேவனாகிய யெகோவாவுடைய ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக இருக்கிற அவருடைய பலிபீடத்தைத்தவிர, நாங்கள் சர்வாங்க தகனத்திற்கும், போஜனபலிக்கும், மற்றப் பலிக்கும் வேறொரு பலிபீடத்தைக் கட்டுகிறதினாலே, யெகோவாவுக்கு எதிராகக் கலகம்செய்வதும், இன்று யெகோவாவைப் பின்பற்றாதபடிக்கு விலகுவதும், எங்களுக்குத் தூரமாக இருப்பதாக என்றார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| הָעֵדָ֡ה | וּנְשִׂיאֵ֣י | הַכֹּהֵ֡ן | פִּֽינְחָס֩ | וַיִּשְׁמַ֞ע | 30 |
| -சபையின் | -மற்றும்-பிரபுக்களும் | -ஆசாரியனும் | பினெகாஸ் | -மற்றும்-கேட்டான் | |
| H5712 | | H3548 | H6372 | H8085 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| אֶת־ | אִתּ֔וֹ | אֲשֶׁ֣ר | יִשְׂרָאֵל֙ | אַלְפֵ֤י | וְרָאשֵׁ֨י |
| -ஐ | அவனோடு | - | இஸ்ரவேலின் | ஆயிரங்களின் | -மற்றும்-தலைவர்களும் |
| H0853 | H0854 | | H3478 | H0505 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| גָ֖ד | וּבְנֵי־ | רְאוּבֵ֧ן | בְּנֵֽי־ | דִּבְּר֛וּ | אֲשֶׁ֥ר | הַדְּבָרִ֗ים |
| காத்தின் | -மற்றும்-புத்திரர்- | ரூபனின் | புத்திரர்- | பேசினார்கள் | - | -வார்த்தைகளை |
| H1410 | | H7205 | | H1696 | | H1697 |

| | | | |
|---|---|---|---|
| בְּעֵינֵיהֶֽם׃ | וַיִּיטַ֖ב | מְנַשֶּׁ֑ה | וּבְנֵ֣י |
| -கண்களில்-அவர்களுடைய | -மற்றும்-நன்றாயிருந்தது | மனாசேயின் | -மற்றும்-புத்திரர் |
| | H3190 | H4519 | |

> ரூபனுடைய கோத்திரத்தார்களும், காத்தின் கோத்திரத்தார்களும், மனாசே கோத்திரத்தார்களும் சொல்லுகிற வார்த்தைகளை ஆசாரியனாகிய பினெகாசும், அவனோடு இருந்த சபையின் பிரபுக்களும், இஸ்ரவேலுடைய ஆயிரம்பேர்களின் தலைவர்களும் கேட்டபோது, அது பார்வைக்கு நன்றாக இருந்தது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| בְּנֵֽי־ | אֶל־ | הַכֹּהֵ֜ן | אֶלְעָזָ֨ר | בֶּן־ | פִּֽינְחָ֣ס | וַיֹּ֣אמֶר | 31 |
| புத்திரர்- | -க்கு | -ஆசாரியன் | எலெயாசாரின் | மகன்- | பினெகாஸ் | -மற்றும்-சொன்னான் | |
| | H0413 | H3548 | H0499 | | H6372 | H0559 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| הַיּ֤וֹם | מְנַשֶּׁ֗ה | בְּנֵ֣י | וְאֶל־ | גָּ֜ד | בְּנֵֽי־ | וְאֶל־ | רְאוּבֵ֨ן |
| -இன்று | மனாசேயின் | புத்திரர் | -மற்றும்-க்கு | காத்தின் | புத்திரர்- | -மற்றும்-க்கு | ரூபனின் |
| H3117 | H4519 | | H0413 | H1410 | | H0413 | H7205 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| לֹא־ | אֲשֶׁ֥ר | יְהוָ֔ה | בְתוֹכֵ֙נוּ֙ | כִּֽי־ | יָדַ֗עְנוּ |
| இல்லை- | - | யெகோவா | -நம்மிடையே | ஏனெனில்- | அறிந்துகொண்டோம் |
| H3808 | | H3068 | H8432 | | H3045 |

| | | | | |
|---|---|---|---|---|
| אָ֚ז | הַזֶּ֑ה | הַמַּ֣עַל | בַּֽיהוָ֖ה | מְעַלְתֶּ֛ם |
| அப்பொழுது | -இந்த | -துரோகம் | -யெகோவாவுக்கு-விரோதமாய் | துரோகம்செய்தீர்கள் |
| | H2088 | H4604 | H3068 | H4603 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| יְהוָֽה׃ | מִיַּ֥ד | יִשְׂרָאֵ֖ל | בְּנֵ֥י | אֶת־ | הִצַּלְתֶּ֤ם |
| யெகோவாவின் | -கையிலிருந்து | இஸ்ரவேலின் | புத்திரரை | -ஐ | விடுவித்தீர்கள் |
| H3068 | H3027 | H3478 | | H0853 | H5337 |

> அப்பொழுது ஆசாரியனான எலெயாசாரின் மகனாகிய பினெகாஸ், ரூபனுடைய கோத்திரத்தார்களையும், காத்தின் கோத்திரத்தார்களையும், மனாசே கோத்திரத்தார்களையும் நோக்கி: நீங்கள் யெகோவாவுக்கு எதிராக அப்படிப்பட்ட துரோகத்தைச் செய்யாதிருக்கிறதினாலே, யெகோவா நம்முடைய நடுவில் இருக்கிறார் என்பதை இன்று அறிந்திருக்கிறோம்; இப்பொழுது இஸ்ரவேல் மக்களைக் யெகோவாவுடைய கைக்குத் தப்புவித்தீர்கள் என்றான்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| וְהַכֹּהֵן | אֶלְעָזָר | בֶּן | פִּינְחָס | וַיָּשָׁב | 32 |
| -ஆசாரியனும் | எலெயாசாரின் | மகன்- | பினெகாஸ் | -மற்றும்-திரும்பினான் | |
| H3548 | H0499 | | H6372 | H7725 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| בְּנֵי־ | וּמֵאֵת | רְאוּבֵן | בְּנֵי־ | מֵאֵת | וְהַנְּשִׂיאִים |
| புத்திரர்- | -மற்றும்-இடமிருந்து | ரூபனின் | புத்திரர்- | -இடமிருந்து | -மற்றும்-பிரபுக்களும் |
| | H0853 | H7205 | | H0854 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| בְּנֵי | אֶל־ | כְּנַעַן | אֶרֶץ | אֶל־ | הַגִּלְעָד | מֵאֶרֶץ | גָּד |
| புத்திரர் | -க்கு | கானானின் | தேசம் | -க்கு | -கிலேயாத்தின் | -தேசத்திலிருந்து | காத்தின் |
| | H0413 | | H0776 | H0413 | H1568 | H0776 | H1410 |

| | | | |
|---|---|---|---|
| דָּבָר׃ | אוֹתָם | וַיָּשִׁבוּ | יִשְׂרָאֵל |
| வார்த்தை | அவர்களுக்கு | -மற்றும்-திருப்பிக்கொண்டுவந்தார்கள் | இஸ்ரவேலின் |
| H1697 | H0853 | H7725 | H3478 |

> ஆசாரியனான எலெயாசாரின் மகனாகிய பினெகாசும், பிரபுக்களும், கீலேயாத் தேசத்தில் இருக்கிற ரூபனுடைய கோத்திரத்தார்களையும், காத்தின் கோத்திரத்தார்களையும் விட்டு, கானான் தேசத்திற்கு இஸ்ரவேல் மக்களிடம் திரும்பிவந்து, அவர்களுக்கு மறுசெய்தி சொன்னார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| יִשְׂרָאֵל | בְּנֵי | בְּעֵינֵי | הַדָּבָר | וַיִּיטַב | 33 |
| இஸ்ரவேலின் | புத்திரரின் | -கண்களில் | -வார்த்தை | -மற்றும்-நன்றாயிருந்தது | |
| H3478 | | | H1697 | H3190 | |

| | | | | |
|---|---|---|---|---|
| וְלֹא | יִשְׂרָאֵל | בְּנֵי | אֱלֹהִים | וַיְבָרֲכוּ |
| -மற்றும்-இல்லை | இஸ்ரவேலின் | புத்திரர் | தேவனை | -மற்றும்-ஸ்தோத்தரித்தார்கள் |
| H3808 | H3478 | | H0430 | H1288 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| אֶת־ | לְשַׁחֵת | לַצָּבָא | עֲלֵיהֶם | לַעֲלוֹת | אָמְרוּ |
| -ஐ | -அழிக்க | -யுத்தத்திற்கு | அவர்களுக்கெதிராக | -போருக்குப்போக | சொன்னார்கள் |
| H0853 | H7843 | | | H5927 | H0559 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| יֹשְׁבִים | גָד | וּבְנֵי־ | רְאוּבֵן | בְּנֵי־ | אֲשֶׁר | הָאָרֶץ |
| குடியிருக்கிறார்கள் | காத்தின் | -மற்றும்-புத்திரர்- | ரூபனின் | புத்திரர்- | - | -தேசத்தை |
| H3427 | H1410 | | H7205 | | | H0776 |

| |
|---|
| בָּהּ׃ |
| -அதில் |

> அந்தச் செய்தி இஸ்ரவேல் மக்களின் பார்வைக்கு நன்றாக இருந்தது; ஆகவே ரூபனுடைய வம்சத்தார்களும் காத்தின் வம்சத்தார்களும் குடியிருக்கிற தேசத்தை அழித்துவிட, அவர்கள் மேல் யுத்தத்திற்குப் புறப்படுவோம் என்கிற பேச்சை விட்டு, இஸ்ரவேல் மக்கள் தேவனை ஸ்தோத்தரித்தார்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| לַמִּזְבֵּחַ | גָד | וּבְנֵי־ | רְאוּבֵן | בְנֵי־ | וַיִּקְרְאוּ | 34 |
| -பலிபீடத்திற்கு | காத்தின் | -மற்றும்-புத்திரர்- | ரூபனின் | புத்திரர்- | -மற்றும்-பெயரிட்டார்கள் | |
| H4196 | H1410 | | H7205 | | H7121 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| פ | הָאֱלֹהִים׃ | יְהוָה | כִּי | בֵּינֹתֵינוּ | הוּא | עֵד | כִּי |
| — | -தேவன்-ஆவார் | யெகோவா | ஏனெனில் | -நமக்கிடையே | அது | சாட்சி | ஏனெனில் |
| | H0430 | H3068 | | H0996 | H1931 | H5707 | |

> யெகோவா தேவன் என்பதற்கு அந்த பலிபீடம் நமக்குள்ளே சாட்சியாக இருக்கும் என்று சொல்லி, ரூபனுடைய வம்சத்தார்களும், காத்தின் வம்சத்தார்களும் அதற்கு ஏத் என்று பெயரிட்டார்கள்.